# கடலூர் மாநகராட்சி

**சுபகிருது வருடம் ஐப்பசி 04–ஆம் தேதி. 2022–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ்க்கண்ட பொருட்கள் சம்பந்தமாக கடலூர் மாமன்றத்தின் அவசரக் கூட்டம் கடலூர் மாமன்ற கூடத்தில் (Council Hall ) நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

மாநகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 19.10.2022

மேயர்,
கடலூர் மாநகராட்சி.

**சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி**

## பொருட்கள்

| | |
|---|---|
| 1) | கடலூர் மாநகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்ட் 2022 மாதத்திய நாட்குறிப்பேடு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் பதிவு செய்யலாம். |
| 2) | கடலூர் மாநகராட்சி 2022–2023 ஆம் ஆண்டு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், பேப்பர்கள், டோனர்கள் வாங்குதல் மற்றும் படிவங்கள் அச்சடித்தல் போன்ற பணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு |

| | |
|---|---|
| | மேற்கொள்ளவும், தோராய செலவினத் தொகை ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்கள் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். (5747/2020/சி4) |
| 3) | 2022–2023 ஆம் ஆண்டிற்கு கடலூர் மாநகராட்சியில் பணிபுரியும் (உள்புறம் மற்றும் வெளிப்புறம்) தூய்மைப் பணியாளர்கள், அலுலலக உதவியாளர்கள், பொறியர் பிரிவு, சுகாதாரப் பணியாளர்கள், (நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க. எண் 13590/200/ஜே3 நாள் 26.10.2009ன்படி ஓட்டுநர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சீருடைகள் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2021–2022ல் ஓட்டுநர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது)<br>எனவே, ஓட்டுநர்கள் தவிர்த்து வழங்கப்பட வேண்டிய சீருடைகள் வழங்குவதற்காகவும், அதற்காக அனுமதிக்கப்பட்ட தையல்கூலிகள் (ஆண்களுக்கு ரூ.500/– பெண்களுக்கு ரூ.80/– எனவும்) மகப்பேறு உதவியாளர்களுக்கு சீருடைப்படியாக ரூ.2000/– (அரசாணை எண் 306, நிதித்துறை (ஊதியக்குழு) நாள் 13.10.2017ன்படி வழங்கவும், சீருடைகள் வழங்க கோ–ஆப்டெக்ஸ் மற்றும் காதிகிராப்ட், கடலூர் ஆகிய இரு அரசு நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் பெற்று சீருடைகள் வாங்கிட உத்தேச செலவினமான ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மாநகராட்சி பொதுநிதியில் இருந்து செலவிட மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். (10822/2022/ எச் 1) |
| 4) | கடலூர் மாநகராட்சி பிறப்பு, இறப்பு பதிவேடுகள் 01.01.2000க்கு முன்பு உள்ளவை. மிகவும் கீலகமாக உள்ளதால், அவற்றை சீர்செய்து (பைண்டிங்) பயன்படுத்த ஏதுவான நிலைக்கு உட்படுத்த செய்து விலைப்புள்ளி கோரப்பட்டது.<br>இதில் திரு.ராஜவேல் என்பவர் குறைந்த அளவு விலைப்புள்ளிகள் அளித்து இருந்ததால், அன்னாருக்கு இறப்பு, பிறப்பு பதிவேடுகள் பைண்டிங் செய்ததற்கு ரூ.51120/– மாமன்ற தீர்மான எண் 107 நாள் 08.07.2022–இல் அனுமதி பெறப் பெற்றது. இவற்றில் பிறப்பு, இறப்பு பதிவேடுகள் பைண்டிங் செய்ததற்கு முதல் தவணையாக ரூ.39,375/– கொடுக்கப்பட்டது.<br>தற்பொழுது திரு.ராஜவேலு, பைண்டிங் செய்தமைக்கு ரூ.20,895/– பட்டியல் சமர்ப்பித்துள்ளதாலும், பட்டியல் தொகை ரூ.11745/– மட்டுமே உள்ளதாலும், தற்பொழுது திரு.ராஜவேலு என்பவருக்கு கூடுதலாக ரூ.9150/– செலவினம் ஏற்பட்டுள்ளது. கூடுதலான செலவினத் தொகை ரூ.9150–க்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| அ.கு. | கூடுதல் தொகை ரூ.9150/– சேர்த்து தொகை வழங்க வேண்டியிருப்பதால், அதனையும் சேர்த்து வழங்க மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்கியதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| 5) | கடலூர் மாநகராட்சி, பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு TN 31 F 7171 பதிவெண் கொண்ட வாகனத்திற்கு ஸ்டியரிங் பாக்ஸ் ஓவராயிலிங், கிளர்ட்ச் பிளேட், கவர் |

| | |
|---|---|
| | அசெம்பிளியுடன் மாற்றுதல், பிரேக் ஓவராயிலிங் (Four Wheels ) ரேடியேட்டர் சர்வீஸ், டீசல், ஆயில், ஏர் பில்ட்டர்ஸ் மாற்றி ஆயில் சர்வீஸ் செய்யும் பணிக்கு ரூ.89.500/– மதிப்பீட்டிற்கான மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசியம், அவசரம் கருதி மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். ( 9057/ 2022/ இ2) |
| 6) | கடலூர் மாநகராட்சி, பொறியியல் பிரிவில் இயக்கப்படும் TN 31 AF 7610 பதிவெண் கொண்ட டம்பர் பிளேசர் கனரக (Eicher Lorry) வாகனத்தினை பழுது நீக்கம் செய்யும் பணி ரூ.1,40,420/– மதிப்பீட்டிற்கான இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசியம், அவசரம் கருதி மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். ( 6270/ 2022/இ2) |
| 7) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 18 வன்னியர்பாளையம் விநாயகர் கோயில் தெரு குறுக்குத் தெருவில் 15–வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக பகிர்மான குழாய் பதித்து (130 மீட்டர் நீளத்திற்கு 110 மி.மீ. HDPE ) அமைக்கும் பணி ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளவும், இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது |
| அ.கு. | அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) குடிநீர் வழங்கல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 8) | கடலூர் மாநகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பணி மேற்கொள்ளும் மாநகர நல அலுவலர் பயன்படுத்தும் ஈப்பு TN 31 E- 7915 வாகனத்தில் கீழ்க்கண்டுள்ள பழுதுகள் ஏற்பட்டுள்ளதால், வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளதாகவும், பழுதுகளை சாசெய்து தர கோரியும் ஓட்டுநர் கேட்டுள்ளார்.<br>1) கிளர்ச் கவர் அசெம்பளி, 2) ஸ்பிரிங் பட்டை சரிசெய்தல் 3) இஞ்சின்டாப் ஓவராயிலிங், 4) வாட்டர் வர்வீஸ் மற்றும் ஆயில் சர்வீஸ் 5.பவர் டோரிங் பாம்<br>மேற்படி வாகனங்களின் பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.64,000/– க்கும், செலவினம் பொது நிதி 2022–2023–ன் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். (10591/ 2022/+எச் 2) |
| 9) | கடலூர் மாநகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பணி மேற்கொள்ளும் வாகனம் TN 31 AF- 7635 வாகனத்திற்கு தகுதிச்சான்று 13.07.2022 உடன் முடிவடைவதால், தகுதிச்சான்று புதுப்பிப்பதற்காக, வாகனங்களின் பழுதுகளை சரிசெய்ய வேண்டியுள்ளது.<br>மேற்படி வாகனங்களின் பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.1,89,400/– மற்றும் தகுதிச்சான்று புதுப்பிக்க வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்துவதற்கு |

ரூ.12,000/– கூடுதல் செலவினம் ரூ.2,01,400/–க்கும், செலவினம் பொது நிதி 2022–2023–ன் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம். (9851/ 2022/ எச் 2)

**10)** கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3 வரிவிதிப்பு எண் 093/003/900640 திருமதி.டாக்டர்.கீதா க/பெ.மணி என்பவர் சொத்து வரி நிர்ணயம் செய்ததை ஆட்சேபித்து, முதன்மை மாவட்ட முன்சீப் நீதிமன்ற வழக்கு எண் ஓ.எஸ்.நெ.116/2022 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் கடலூர் மாநகராட்சி சார்பாக திரு.அ. ஜெயமணி, B.A., L.L.B., மாநகராட்சி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி வழக்கினை நடத்திடவும், மேற்படி வழக்கிற்கு ஆகும் தோராய செலவினம் மாநகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம். ( 10694/ 2022/ அ4)

**11)** கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23 வரிவிதிப்பு எண்கள் 093/023/901011, 093/023/901011 மற்றும் 093/023/901011 திருமதி.நிர்மலா மற்றும் திரு.ரமேஷ் என்பவர் சொத்து வரி நிர்ணயம் செய்ததை ஆட்சேபித்து, முதன்மை மாவட்ட முன்சீப் நீதிமன்ற வழக்கு எண் ஐ.ஏ.நெ.269/2022, ஓ.எஸ்.எண் 112/2022 என்ற எண்களில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் கடலூர் மாநகராட்சி சார்பாக திரு.அ. ஜெயமணி, B.A., L.L.B., மாநகராட்சி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி வழக்கினை நடத்திடவும், மேற்படி வழக்கிற்கு ஆகும் தோராய செலவினம் மாநகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம். ( 10557 / 2022/ அ4)

**12)** கடலூர் மாநகராட்சிப் பகுதியில் உள்ள 45 வார்டுகளிலும் உள்ள கால்வாய்களை சுத்தம் செய்வதற்கு, எதிர்வரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கையாக, பொதுமக்கள் நலன் கருதி, 45 வார்டுகளுக்கும் உள்ள பெரிய பெரிய கால்வாய்களை Hitachi மூலம் தூர்வாரும் பணிக்கு, மாநகராட்சி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று, மாநகராட்சி ஒப்பந்ததாரர்களிடம் நேரடி விலைப்புள்ளி 13.07.2022ல் பெறப்பட்டதில், கீழ்க்காணும் விபரப்படியான விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ஒரு மணி நேரத்திற்கு டீசல், டிரைவர் ஊதியம் உட்பட)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி.ஆர்.நவநீதம், நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>28, கண்ணகி நகர், வண்டிப்பாளையம், கடலூர் | 2500/– |
| 2 | திரு.பர்குணன், நகராட்சி ஒப்பந்ததாரர், கடலூர் | 2700/– |
| 3 | திரு.ஆர்.ரவிச்சந்திரன், நகராட்சி ஒப்பந்ததாரர், கடலூர் | 2350/– |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில், வரிசை எண் 3–ல் காணும் திரு.ஆர்.ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரரின் விலை விகிதம் ரூ.2350/– என வழங்கிய விலைப்புள்ளியை ஏற்று ரூ.5.00 இலட்சம், அதற்கான செலவினத்தில் பொது நிதி 2022–2023ல் பணிகள் மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| | |
| அ.கு. | 1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்காம். |
| 13) | கடலூர் மாநகராட்சிப் பகுதியில் உள்ள 45 வார்டுகளிலும் உள்ள பெரிய கல்வெர்ட்டுகள், பெரிய கால்வாய்களை தூர் வாருவதற்கும், எதிர்வரும் வடகிழக்கு பருவமழை சுத்தம் செய்வதற்கு, எதிர்வரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கையாக, பொதுமக்கள் நலன் கருதி, 45 வார்டுகளுக்கும் உள்ள பெரிய கல்வெர்டுகள் மற்றும் பெரிய கால்வாய்களை 10 மண்வாறு இயந்திரம் மற்றும் 20 டிப்பர் டிராக்டர் மூலம் தூர்வாரும் பணிக்கு, மாநகராட்சி மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று, மாநகராட்சி ஒப்பந்ததாரர்களிடம் நேரடி விலைப்புள்ளி 08.07.2022ல் பெறப்பட்டதில், கீழ்க்காணும் விபரப்படியான விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(ஒரு மணி நேரத்திற்கு டீசல், டிரைவர் ஊதியம் உட்பட)<br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>வாகனம்</th><th>விலை விகிதம்</th></tr><tr><td>1</td><td>திருமதி.ஆர்.நவநீதம், நகராட்சி ஒப்பந்ததாரர், 28, கண்ணகி நகர், வண்டிப்பாளையம், கடலூர்</td><td>1.மண்வாறு இயந்திரம்<br>2.டிராக்டர் டிப்பர்</td><td>820/–<br>3800/–</td></tr><tr><td>2</td><td>திரு.பர்குணன், நகராட்சி ஒப்பந்ததாரர், கடலூர்</td><td>1.மண்வாறு இயந்திரம்<br>2.டிராக்டர் டிப்பர்</td><td>795/–<br>3500/–</td></tr><tr><td>3</td><td>திரு.ஆர்.ரவிச்சந்திரன், நகராட்சி ஒப்பந்ததாரர், கடலூர்</td><td>1.மண்வாறு இயந்திரம்<br>2.டிராக்டர் டிப்பர்</td><td>784/–<br>3350/–</td></tr></table><br>மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில், வரிசை எண் 3–ல் காணும் திரு.ஆர்.ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரரின் விலை விகிதம், ஏனைய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை விட குறைவாக உள்ளதால், திரு.ஆர்.ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரரின், விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்கான செலவினம் ரூ.27.00 இலட்சத்திற்கும், செலவினத்தினை பொது நிதி 2022–2023ல் மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |
| அ.கு. | 1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2.பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம். |
| 14) | கடலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 45 வார்டுகளுக்கும், பொது சுகாதாரப் பணி மேற்கொள்ள 9 பொது சுகாதார கோட்டத்திற்கும் போதிய வானங்கள் குப்பை அகற்றுவதற்கு இன்மையால், மாமன்ற அனுமதி பெற்று 5 டிப்பர் டிராக்டர்கள் ஒப்பந்த அடிப்படையில், வாடகைக்கு அமர்த்தி பணி செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஒப்பந்த காலம் செப்டம்பர் 2022 உடன் முடிவடைகின்றது. இதனையடுத்து, பொது சுகாதாரப் பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் கருதி மேலும் மூன்று மாதத்திற்கு சுகாதார ஆய்வர் குறிப்பு கொடுத்துள்ளதையடுத்து, தற்போது அக்டோபர் 2022, நவம்பர் 2022 மற்றும் டிசம்பர் 2022 ஆகிய மாதத்திற்கு 5 டிப்பர் டிராக்டர்கள் வாடகைக்கு அமர்த்தி பணி செய்யவும், |

| | |
|---|---|
| | பணியினை ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.ரவிச்சந்திரன் என்பவர் மூலம், ஏற்கனவே பணி செய்யும் அதே தினசரி வாடகைக்கு அக்டோபர் 2022 முதல் டிசம்பர் 2022 வடைர பணி செய்யவும், இதற்கான தோராய செலவினம் ரூ.20.00 இலட்சத்தை 2022–2023 பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| **அ.கு.** | 1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>**2.**பொது சுகாதார நலன் கருதி, மாமன்ற மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம். **(3062/ 2022/ எச் 2)** |
| **15)** | கடலூர் மாநகராட்சியானது கடலூர் மாவட்டத்தின் தலைநகரமாக விளங்குவதோடு, மிக வேகமாக வளர்ந்து வரும் மாநகராட்சிகளில் ஒன்றாகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி மக்கள் தொகை 1,73,636 ஆகும். தற்போதைய 2022ம் ஆண்டு உத்தேச மக்கள் தொகை 1,98,052 ஆகும். இம்மாநகராட்சி 27.69 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட 45 வார்டுகளை உள்ளடக்கிய மாநகராட்சியாகும். இம்மாநகரில், 49,513 குடியிருப்புகளும், 4,116 வர்த்தக நிறுவனங்களும் உள்ளன. ஒரு பேருந்து நிலையம் உள்ளது. மேலும், தினசரி காய்கறி மார்க்கெட் 3 எண்ணங்களும், மீன் மார்க்கெட் 3 எண்ணங்களும் உள்ளன. கடலூர் மாநகர பகுதிகளில் வெள்ளி கடற்கரை சுற்றுலாத் தளம் 3 ச.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. ஓட்டு மொத்தமாக குப்பைகளை உருவாக்குபவர்களின் எண்ணிக்கை 42 ஆகும். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 34 மெ.டன். அளவுள்ள திடக்கழிவகள் உருவாகிறது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், மாநகரில் உருவாகும் குப்பைகள் மற்றும் கழிவுகள் முறைப்படி சேகரிக்கப்பட்டு, மட்கும் குப்பைகள் மட்காத குப்பைகள் முறைப்படி தரம் பிரிக்கப்பட்டு 3 பசுமை உரக்குடில்கள் (MCC), 10 பூங்கா உரக்குடில்கள் மற்றும் 1 வள மீட்பு மையம் மூலம் மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது.<br><br>ஆணையர் அவர்களின் அறிவுரைகளின்படி, கடலூர் பகுதிகளில் பல்வேறு வார்டுகளில் உள்ள வீடுகளில் முதல் நிலை சேகரித்தல் மூலமாகவும், பல்வேறு இடங்களில் இரண்டாம் நிலை சேகரித்தல் மூலமாகவும் குப்பைகள் மற்றும் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, மேற்படி குப்பைகளில் உள்ள வகைகளை தரம் பிரிக்கப்பட்டது. மூன்று பசுமை உரக்குடில்கள் மூலம் மட்கும் குப்பைகளை இயற்கை உரமாக்கும் பணி நடைபெறுகிறது. மட்காத குப்பைகளை முடிவுக்கு கொண்டு வரவும், புதியதாக வள மீட்பு மையம் அமைக்கப்பட்டு, அதில் புதியதாக பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, பணி மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், பொது சுகாதாரப் பிரிவில், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மட்டுமல்லாமல், பணியாளர்களின் வருகைப் பதிவினை உறுதி செய்தல், பொது சுகாதார வாகனங்களை பராமரித்தல், பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் சமுதாயக் கழிப்பிடங்களை பராமரித்தல், கழிவு நீர் வாய்க்கால்களை சுத்தம் செய்தல், பேரூந்து நிலையம், தினசரி மார்க்கெட், பஜார் பகுதிகள், வழிபாட்டுத் தளங்கள் மற்றும் முக்கிய சாலைகள், பள்ளிகள்/கல்லூரிகள் பகுதிகள் ஆய்வு செய்தல், டெங்கு, மலேரியா, காலரா உள்ளிட்ட தொற்று நோய்கள் கட்டுப்படுத்தல் தொடர்புடைய பணிகள், கொசு ஒழிப்பு, பிறப்பு இறப்பு பதிவு செய்தல், வணிக நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குதல், தூய்மை இந்தியா திட்டப் பணிகள், தெருநாய்கள் கட்டுப்படுத்துதல் மற்றும் அவ்வப்போது ஏற்படும் இயற்கை சீற்றங்களின்போது ஏற்படும் நிகழ்விற்கு ஏற்ப சாதாரண நிலைக்கு திரும்ப தேவையான அத்தியாவசிய தூய்மைப் பணிகள் |

செய்தல், மற்றும் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939, தமிழ்நாடு பிறப்பு இறப்பு பதிவு விதிகள் 2000 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ஆகிய சட்ட விதிகளை அமல்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய பணிகளை துப்புரவு ஆய்வர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

இதில், கடலூர் மாநகராட்சியில் அனுமதிக்கப்பட்ட துப்புரவு ஆய்வர் பணியிடங்கள் 12 ஆகும். ஆனால், தற்போது, 3 துப்புரவு ஆய்வர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். இவர்களால், மேற்சொன்ன அனைத்து பணிகளையும் திறம்பட செய்து முடிப்பதில் பல்வேறு இடையுறுகள் மற்றும் நடைமுறை சிக்கல்கள் உள்ளன. எனவே, கடலூர் மாநகராட்சிக்கென நிரந்தர துப்புரவு ஆய்வர்கள் நியமிக்கப்படும் வரை காந்திகிராமிய பல்கலைக் கழகத்தில் சுகாதார ஆய்வாளர் பயிற்சி பெற்ற 6 நபர்களை துப்புரவு ஆய்வர்களாக முற்றிலும் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்று, மூன்று மாத காலத்திற்கு பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**துப்புரவு ஆய்வர்களுக்கான செலவினங்கள் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| **1)** | துப்புரவு ஆய்வாளர்களுக்கான மாதாந்திர ஒப்பந்த ஊதியத் தொகை (சென்னைக்கு அருகிலுள்ள நகராட்சிகளில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகை) | : | ரூ.20,000/– |
| | ஒரு துப்புரவு ஆய்வாளருக்கு ஒரு ஆண்டுக்குரிய கூலி (ரூ.20000x3) | : | ரூ.60,000/– |
| | EPF - 13% | : | ரூ.7,800/– |
| | ESI - 3.25% | : | ரூ.650/– |
| | இதுவரை மொத்தம் | | ரூ.68,450/– |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 7% | : | ரூ.4,791/– |
| | **மொத்தம்** | : | ரூ.73,241/– |
| | 6 துப்புரவு ஆய்வாளர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஆகும் செலவினம் (ரூ.73,241 x 6) | : | **ரூ.4,39,446/–** |

பொது சுகாதார அவசர அவசியம் கருதி, மேற்படி பணியாளர்களை தனியார் ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறவும், பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கான உத்தேச செலவு ரூ.4.40 இலட்சம் ஆகும்.

**அ.கு.** பொது சுகாதாரப் பிரிவு அவசர அவசியம் கருதி மாமன்றம் அனுமதிக்கலாம். அதற்குரிய செலவினத்தை மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 10523/எச்–1 /2022 )

**16)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு. ந.க.எண்28244–24/2021/P2 நாள் 03.08.2022 ன்படி நமக்கு நாமே திட்டம் 2021–22ன் கீழ்

கடலூர் மாநகராட்சிக்கு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முதற்கட்டமாக 15 வார்டுகளில் கண்காணிப்பு கேமரா மற்றும் கூடுதல் உபகரணங்கள் பொருத்தும் பணி | ரூ.31.00 இலட்சம் |
| 2 | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 33 புருகீஸ்பேட்டை பகுதியில் தார்சாலையினை புதுபிக்கும் பணி | ரூ.23.50 இலட்சம் |

மேற்படி பணிகளுக்கு 26.08.2022 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியலின்படி கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் குறிப்பிடப்பட்டிருந்தது.

| வ. எண் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | 31.00 | திரு. ஆர். ரவிச்சந்திரன், கடலூர். | 0.35% மதிப்பீட்டை விட குறைவு |
| | | Safe Infratech Private Limited | முன் வைப்புத்தொகை செலுத்தப்படவில்லை. |
| | | M/s. K.S. Smart Solutions pvt ltd | |
| | | Electro point services | |
| | | Catura tech Automation Pvt Ltd., | |
| 2 | 23.50 | திரு. கே. வைத்திலிங்கம், கடலூர். | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |
| | | திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாகூர். | 0.36% மதிப்பீட்டை விட அதிகம் |

வரிசை எண் 1ல் காணும் பணிக்கு பெறப்பட்ட 5 ஒப்பந்தப்புள்ளிகளில் 4 ஒப்பந்ததாரர்கள் முன்வைப்புத்தொகை செலுத்தாததால் 4 ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கபட்டது. மீதமுள்ள 1 ஒப்பந்தபுள்ளி மற்றும் வரிசை எண் 2ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம், விபரம் பின்வருமாறு உள்ளது.

| வ. எண் | மதிப்பீடு. (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | 31.00 | திரு. ஆர். ரவிச்சந்திரன், கடலூர். | 0.35% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | 23.50 | திரு. கே. வைத்திலிங்கம், கடலூர். | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ள இந்த பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளியினை ஒப்புதல் செய்யவும் பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**17)** கடலூர் மாநகராட்சி வார்டு எண் **19** முத்துக்குமரன் காலனி பகுதியில் . குடிநீர் குழாய் **110** மி.மீ. **380** மீட்டர் நீளத்திற்கு பதித்திடும் பணி ரூ.**6.80** இலட்சத்தில் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**18)** கடலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டப் பணிக்கு பயன்படுத்தப்படும் TN 31 CB 5812 பதிவெண் கொண்ட வாகனத்தின் FC முடிவடையும் நிலையில் உள்ளது. FC புதுப்பிக்க வேண்டியுள்ளதால், வாகனத்தில் உள்ள பழுதுகளை வாகனம் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனம் Whale Enterprises Private Ltd., மூலம் பழுது நீக்கப் பணி மேற்கொள்ளவும், இதற்கான செலவினம் ரூ.**3.95** இலட்சத்திற்கு அனுமதியும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** **1.** மாமன்றம் அனுமதிக்கலாம்.
**2.** பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று Whale Enterprises Private Ltd., நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**19)** கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட **1** முதல் **45** வார்டு வரை உள்ள பகுதிகளில் தெருவிளக்குகளை பராமரிக்க மின் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.**20.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு **30.08.2022**–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்** |
|---|---|---|
| 1. | R, ரவிச்சந்திரன், கடலூர் | 0.04% (ரூ. 16,79,625) மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 1.05% (ரூ. 16,98,050) மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் **1**ல் கண்ட திரு. R.ரவிச்சந்திரன், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (**0.04%** மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. R, ரவிச்சந்திரன், கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மேயர், அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9782/2022/இ2)

| | |
|---|---|
| 20) | கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33 கொடிக்கால்குப்பம் குடிசைப் பகுதியில் குடிநீர் விநியோகம் குழாய் வழியாக போதுமான குடிநீர் வராமல், தடைப்பட்டு வருவதால் அந்த பகுதியில் மூன்று ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி ரூ.1.00 இலட்சத்தில் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி, பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் |
| 21) | கடலூர் மாநகராட்சி 15வது நிதிக்குழு மான்யம் நிதி 2020–2021–ஆம் நிதியாண்டிற்கு திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்ட இடத்திற்கும், நீர்த்தேக்க தொட்டிக்கும் Air Valve கூடுதலாக அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.40.50 இலட்சம் பணியில் ஒப்பந்ததாரர், ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 4.96 % கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்திலான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி பணி மேற்கொள்ளப்படும்போது, கூடுதலாக 150மீட்டர் நீளத்திற்கு குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நீர் உந்துக் குழாய் பதிக்கும் பணி மேற்கொண்டமைக்கான தொகை ரூ.11.50 இலட்சத்திற்கு அனுமதியும், இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் |
| 22) | கடலூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பணிக்கு, மலேரியா கொசு ஒழிப்பு பிரிவின் மூலம் கொசு ஒழிப்பு நடவடிக்கையும், டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய் தடுப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதிர்ந்த கொசுக்களை ஒழிக்க சிறிய புகைபேக்கி இயந்திரங்கள் உதவியுடன் பைரித்திரம் 2 % எக்ஸ்ட்டிராக்ட் எனும் கொசு மருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது மழைக்காலம் என்பதால், டெங்கு போன்ற காய்ச்சலின் தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாலும், கொசு ஒழிப்பு பணியினை தீவிரப்படுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும், துணை இயக்குநர், பொது சுகாதாரப்பணிகள், கடலூர் அலுவலகத்தில் கொசு ஒழிப்பு பணியினை தீவிரப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>தற்போது கொசு ஒழிப்பு, கொசு மருந்துகள் இருப்பில் குறைவாக உள்ளதால், பொது மேலாளர் ( மருந்துகள்) தமிழ்நாடு மெடிக்கல்ஸ் சர்வீசஸ் கார்பரேஷன்ஸ் லிமிடெட், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 003/M(P)/INSECT-LARVI(II)/TNMSC/2020. நாள். 31.12.2021 கடிதத்தின்படி<br>1. பைத்திரம் 2 % எக்ஸ்ட்ராக்ட் என்ற மருந்தினை மெசர்ஸ் பாராமௌண்ட் பெஸ்டிசைட்ஸ் பிரைவேட் லிமிடெட், டெல்லி ரோடு, மீரட், உத்திரபிரதேசம் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கிக்கொள்ளவும்,<br>2. டெக்னிக்கல் மாலத்தியான் என்ற மருந்தினை மெசர்ஸ் இனேஷ் இண்டஸ்ட்ரீஸ் , தீபக் மருத்தவமனை ரோடு, பஜந்தர்ஸ் கிழக்கு, தானே, மகாராஸ்ட்ரா என்ற நிறுவனத்திடமிருந்தும்,<br>3. டெமிபாஸ் எமல்சிபிரபில் 50 % இசி என்ற கொசுப்புழு ஒழிப்பு மருந்தினை மெசர்ஸ் யுனிகில் பெஸ்டிசைட்ஸ் பிரைவேட் லிமிடெட் விடிஷா, மத்தியபிரதேசம் என்ற நிறுவனத்திடம் வாங்கிக்கொள்ளவும், அனுமதி வழங்கியுள்ளது. |

எனவே, மேற்படி நிறுவனத்திடமிருந்து 1) பைத்திரம் 2 % எக்ஸ்ட்ராக்ட் எனும் கொசு ஒழிப்பு மருந்து 150 லிட்டர், 2) டெக்னிக்கல் மாலத்தியான் எனும் கொசு ஒழிப்பு மருந்து 500 லிட்டர், மற்றும் 3) டெமிபாஸ் எமல்சிபிஏபில் 50 % இசி 100 லிட்டர் , ஆகிய மருந்துகள் மேற்கண்ட நிறுவனத்திடம் வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவு ரூ. 5.85 லட்சத்திற்கும், செலவினம் பொது நிதி 2022–2023 ன் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** பொது சுகாதாரப்பணியின், அவசர அவசியம் கருதி, மேற்படி மருந்தினை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**23)** கடலூர் மாநகராட்சி வார்டு எண். 1 முதல் 45 வார்டு வரை அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மானக் குழாய், பிரதான குழாய், வால்வுகள் மற்றும் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையம், சாவடி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கேப்பர் மலை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்கள், வால்வுகளில் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் கருதி மேயர், கடலூர் மாநகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**24)** கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில், அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குளங்கள் தூர்வாரி மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்( எம்ஏ2 ) துறை அரசாணை ( எம் எஸ் ) எண் 122 நாள் 09.09.2022ன்படி கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மத்திய அரசு பங்குத் தொகை | மாநில அரசு பங்குத் தொகை | மாநகராட்சி பங்குத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட TS. No. 1413, பிளாக்–43, வார்டு எண் 6 கே.கே.நகர் குளத்தினை தூர்வாரி, கரையினை பலப்படுத்தி நடைபாதை அமைக்கும் பணி | ரூ.45.74 இலட்சம் | ரூ.28.00 இலட்சம் | ரூ.16.80 இலட்சம் | ரூ.0.94 இலட்சம் |
| 2 | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட TS. No. 978, பிளாக்–13, வார்டு எண் 7 நல்லான்செட்டி குளம்/ஞானப்பிரகாசம் காலனி தூர்வாரி, கரையினை பலப்படுத்தி நடைபாதை அமைக்கும் பணி | ரூ.48.60 இலட்சம் | ரூ.28.00 இலட்சம் | ரூ.16.80 இலட்சம் | ரூ.3.80 இலட்சம் |
| | **மொத்தம்** | ரூ.94.34 இலட்சம் | ரூ.56.00 இலட்சம் | ரூ.33.60 இலட்சம் | ரூ.4.74 இலட்சம் |

| | |
|---|---|
| | மேற்காணும் நிதி ஒதுக்கீட்டில் பணி மேற்கொள்ளவும், மாநகராட்சி பங்குத்தொகை ரூ.4.74 இலட்சம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 25) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட சுப்புராயலு பூங்கா, மத்திய பேருந்து நிலையம், மஞ்சக்குப்பம் மற்றும் கடலூர்முதுநகர் பகுதிகளில் அமைந்துள்ள பழங்காலத்து மணிகூண்டுகளில் உள்ள கடிகாரம் பழுதடைந்து விட்டதால் அம்மணிக்கூண்டுகளில் புதிதாக கடிகாரம் அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதால், மேற்கண்ட மணிகூண்டுகளில் உள்ள கட்டிடங்களின் பழுதுகளை சரி செய்யும் பணி ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 26) | கடலூர் மாநகராட்சியில் பருவநிலை மாற்றங்கள் மழைக்காலங்களில் நோய் தொற்று மற்றும் டெங்கு காய்ச்சல் தொடர்ந்து பரவுவதால், பொதுசுகாதாரப் பிரிவு கோட்டம் 1 முதல் 11 வரையிலான 45 வார்டுகளில் உள்ள தெருக்களில் தினசரி கொசு புகை மருந்து தெளிக்க பழைய இயந்திரங்கள் பழுது நீக்கம் செய்யவும், புதியதாக பெரிய அளவில் இரண்டும், சிறியது கையால் பயன்படுத்த 6 எண்ணிக்கைகள் வாங்கிடவும் அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் தீர்மானம் எண் 157 நாள் 02.07.2022ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மாமன்றத்தின் அனுமதியின்படி புதியதாக கொசு புகை மருந்து தெளிக்கும் இயந்திரங்கள் வாங்கிட கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையின்படி, வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br><table><tr><th>வ. எண்</th><th>விநியோகஸ்தர் விபரம்</th><th>சிறிய இயந்திரம் (ஒன்றின் விலை) ரூ.</th><th>பெரிய இயந்திரம் (ஒன்றின் விலை) ரூ.</th></tr><tr><td>1</td><td>பேன்சி அசோசியேட்ஸ், 165 பெரிய பள்ளிவாசல் தெரு, விருதுநகர்</td><td>99,000/– (GST உட்பட)</td><td>6,85,000/– GST உட்பட)</td></tr><tr><td>2</td><td>திருநெல்வேலி மாவட்ட தொடர்பு தொழிலாளர் சேவைத் தொழில் கூட்டுறவு சங்கம் லிட்.,</td><td>1,80,000</td><td>6,98,000/–</td></tr></table><br>மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கிய வரிசை எண் 1ல் காணும் பேன்சி அசோசியேட்ஸ், விருதுநகர் என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று பொதுமக்களின் நலன் கருதி, அவசரம் அவசியத்திற்காக, மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதியை எதிர்நோக்கி வழங்கல் உத்திரவு வழங்கியதனையும், இதற்கான செலவினத்தை பொதுநிதியில் செலவிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம். |
| அ.கு. | அவசரம் அவசியம் கருதி பொதுமக்கள் நலனுக்காக மாமன்றம் அனுமதிக்கலாம்<br>(9057/22/எச் 1) |

| | |
|---|---|
| 27) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 38 ஏற்றங்கரை மாரியம்மன் கோவில் தெருவில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் பழுதடைந்து விட்டதால், பொதுமக்களுக்கு போதிய குடிநீர் செல்லாததால், புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் பதித்து தங்கு தடையின்றி வழுங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.50 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளவும், இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருநது வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 28) | கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 34, குழந்தை காலனி கழிப்பிடம் பழுதடைந்துள்ளது. அந்த கழிப்பிடத்தை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலடசத்தில் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ளவும், இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். ( 9783/ 2022/இ1) |
| 29) | கடலூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பணிக்கு மலேரியா கொசு ஒழிப்பு பிரிவின் மூலம் கொசு ஒழிப்பு நடவடிக்கையும், டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய் தடுப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>தற்போது பொது மக்களுக்கு, பள்ளி மாணவ, மாணவிகள் போன்றவர்களுக்கு இலவசமாக வழங்க நிலவேம்பு சூரணம் இருப்பில் இன்மையால், 300 கிலோ நிலவேம்பு சூரணம், அரசு அனுமதி பெற்ற டாம்ப்கால், சிட்கோ, திருப்போரூர் நிறுவனத்திடம் பெறவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3,20,000/– த்திற்கும், செலவினம் பொது நிதி 2022–2023ன் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி நில வேம்பு சூரணம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கிக் கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 30) | கடலூர் மாநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் TN 31CB 5812 பதிவெண் கொண்ட பாதாள சாக்கடை திட்ட பணிக்காக பயன்படுத்தப்படும் ஜெட்ராடிங் வாகனத்திற்கு ஆயுள் காப்பீடு ஆகஸ்ட் 2021 உடன் முடிவடைந்துவிட்டதால், இவ்வாகனத்தின் ஆயுள் காப்பீட்டை தற்போது அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை புதுப்பிக்க ஆகும் செலவீனம் ரூ.73,620/-க்கு நிர்வாக அனுமதியும், மேற்படி, தொகையினை நேஷ்னல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தவும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 31) | கடலூர் மாநகராட்சி 27.69 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள, 173636 மக்கள் தொகை கொண்ட மாநகராட்சியாகும். மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் நீர் ஆதாரங்களான சாவடி, கேப்பர்மலை, திருவந்திபுரம் ஆகிய தலைமை நீரேற்று நிலையங்கள் மூலம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மொத்தம் 15.63 MLD குடீநீர் வழங்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி அளவுகோலின்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் |

| | |
|---|---|
| | வழங்கப்பட வேண்டும். ஆனால், தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 90 லிட்டர் குடிநீர் மட்டுமே வழங்க முடிகிறது. மேலும், தற்போது கோடைகாலம் வருவதால் நீராதாரங்களான ஆழ்துளை கிணறுகளில் நீர் மட்டம் குறைந்து வருவதால் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், 45 வார்டுகளிலும் குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கப்படாத பகுதிகளான மஞ்சக்குப்பம், புதுப்பாளையம், வண்டிப்பாளையம், முதுநகர் பகுதி மற்றும் குடிநீர் குழாயில் மாசடைந்த பகுதிகளான திருப்பாதிரிப்புலியூர், புதுப்பாளையம், மஞ்சக்குப்பம், சொரக்கல்பட்டு ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கும் பொருட்டு 45 வார்டுகளுக்கும், 5 எண்ணிக்கை டிராக்டர் மூலம் நாளொன்றுக்கு மூன்று நடைகள் வீதம் மூன்று மாதங்களுக்கு கோடைகால பற்றாக்குறையை போக்கிடவும் பொதுமக்கள் நலன் கருதி வாடகை அடிப்படையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நெல்லிக்குப்பம் அக்ரோ இன்ஜினியரிங் அண்ட் சர்வீஸ் கோ.ஆப்ரேட்டிவ் சென்டர் லிமிடெட், நிறுவனத்தின் மூலம் குடிநீர் சப்ளை செய்யவும், இப்பணியினை செய்ய மூன்று மாதங்களுக்கு ஆகும் செலவினம் ரூ.40.00 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்.387 நாள் 20.05.2022ல் 01.04.2022 முதல் 30.06.2022 வரை அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும், 01.07.2022 முதல் 20.08.2022 வரை ரூ.14.50 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது கடலூர் மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் கலங்களாக வருவதாலும், மாமன்ற உறுப்பினர்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதாலும், மேலும் சில பகுதிகளில் குடிநீர் சரிவர கிடைக்காமல் உள்ளதாலும், மேற்படி பணி மேற்கொள்ளப்பட வேண்டியதற்கு ரூ.30.00 இலட்சத்திற்கு தினசரி 4 எண்ணிக்கை டிராக்டர் மூலம் (21.09.2022 முதல் 30.12.2022 வரை) ஆகும் உத்தேச செலவினத்தையும் சேர்த்து ரூ.45.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதியும், மொத்தமாக ரூ.45.00 இலட்திற்கு இப்பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசரம் கருதி மேயர், கடலூர் மாநகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று அக்ரோ இன்ஜினியரிங் அண்ட் சர்வீஸ் கோ.ஆப்ரேட்டிவ் சென்டர் லிமிடெட், நெல்லிக்குப்பம் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மாமன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 8398 /2011/இ2) |
| **32)** | கடலூர் மாநகராட்சி 2022 – 2023 ஆண்டிற்கான அலுவலக பயன்பாட்டிற்கு புத்தகங்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் வாங்க அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களிடம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் 27.09.2022 அன்று வரப்பெற்ற இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது. |

| வ. எண் | பதிவேடுகள்/படிவங்கள் | எண்ணிக்கை | தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வீஸ், திருச்சி தொகை (ஒன்றுக்கு) (including GST - 18%) ரூ. | திருச்சி இண்டிகோ பிரஸ், திருச்சி (ஒன்றுக்கு) (including GST - 18%) ரூ. |
|---|---|---|---|---|
| 1 | A4 WHITE PAPER 80GSM – TNPL (Platinum) | 1 | 481.60 | 515.20 |
| 2 | PAYMENT BOOK – LEGAL SIZE – 100 Pg | 1 | 613.60 | 637.20 |
| 3 | PAYMENT BOOK – LEGAL SIZE – 200 Pg | 1 | 885 | 920.40 |
| 4 | TRANSFER OF FUND REG | 1 | 401.20 | 413.00 |
| 5 | ADVANCE RECOVARABLE REG – 1 YEAR | 1 | 401.20 | 413 |
| 6 | ADVANCE REG – MF NO.73A | 1 | 401.20 | 413 |
| 7 | REGISTER OF LOAN | 1 | 401.20 | 413 |
| 8 | CHEQUE REGISTER | 1 | 401.20 | 413 |
| 9 | PROVIDENT FUND REGISTER | 1 | 1062 | 1091.50 |
| 10 | RTI REGISTER | 1 | 613.60 | 637.20 |
| 11 | GDP REGISTER | 1 | 401.20 | 413 |
| 12 | CM CELL REGISTER | 1 | 401.20 | 413 |
| 13 | CPS REGISTER | 1 | 613.60 | 637.20 |
| 14 | SPF REGISTER | 1 | 1062 | 1091.50 |
| 15 | WRAPPER SHEET BOARD (Printing)8Kg SPB COLOUR BOARD – 100 Nos | 1 | 1060 | 1091.50 |
| 16 | FILE PAD (URGENT/ORDINARY) | 1 | 82.60 | 88.50 |
| 17 | TAG | 1 | 70.80 | 75.52 |
| 18 | PROPERTY TAX – ML REG – MF.NO.8 | 1 | 401.20 | 413 |
| 19 | PROPERTY TAX – ML REG – MF.NO.8 | 1 | 613.60 | 637.20 |
| 20 | NAME TRANSFER REG | 1 | 401.20 | 413 |
| 21 | MDR – 5 YEARS | 1 | 5605 | 5782 |
| 22 | MDR - ADR | 1 | 1062 | 1091.50 |
| 23 | வெளியூர் தபால் பதிவேடு | 1 | 613.60 | 637.20 |
| 24 | உள்ளூர் தபால் பதிவேடு | 1 | 401.20 | 413 |
| 25 | அஞ்சல்வழி அனுப்புகை தபால் பதிவேடு | 1 | 401.20 | 413 |
| 26 | மின்னஞ்சல் கடித பதிவேடு | 1 | 613.60 | 637.20 |
| 27 | பதிவு தபால் பதிவேடு | 1 | 613.60 | 637.20 |
| 28 | LOG BOOK | 1 | 826 | 855.50 |
| மொத்தம் | | | 20,907.40 | 21,606.52 |

மேற்கண்ட ஒப்புநோக்கு பட்டியலின்படி புத்தகங்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் விநியோகம் செய்ய குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த மேலாண்மை இயக்குநர், திருச்சி மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வீஸ், திருச்சி அவர்களிடம் வாங்கவும், அதற்கான

செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் செலவினத் தொகை ரூ.2,20,000/– க்கு மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு.**

அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 5747/2020/சி 4

**33)**

கடலூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டும் திட்டம் ரூ. 42.00 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்த, தமிழ்நாடு மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் (TNSUDP) மூலம் கீழ்க்கண்டவாறு நிதி பகிர்ந்தளிப்பு செய்யப்பட்டது.

| **Sl. No** | **Means of Finance** | **Amount** | **%** |
|---|---|---|---|
| 1 (i) | Loan from Tamil Nadu Urban Development fund (TNUDF) under world Bank assisted TNSUDP | **4.20** | 10.00 |
| (II) | Grant from Project Sustainability Grant fund (PSGF) under world Bank assisted TNSUDP | 33.60 | 80.00 |
| (III) | **ULB Contribution :**<br>i. By way of grant under Special Member of Parliament Local Area Development Schme (MPLADS) | 3.00 | 10.00 |
| | ii. ULB own fund | 1.20 | |
| | Total | 42.00 | 100.00 |

இத்திட்டத்திற்கான மானியத் தொகை ரூ. 33.60 கோடியில் தற்போது வரை ரூ.19.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.14.00 கோடி பெறுவதற்கு 31.03.2022வரை கால நீட்டிப்பு செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுடன் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

நிபந்தனைகள் பின்வருமாறு.

1. The grant sanction was valid upto 31.03.2022 it may be extended to 31.03.2023. If the grant is not utilized within this validity period of 2 years, necessary extension may be considered at the request of the Municipality, on the terms and conditions as may be decided by TNUDF at the time of extension.

2. Monthly progress report on the utilization of Grant in the prescribed format to be submitted to TNUFISL.

3. Goods, equipments, services and materials to be financed would be procured according to the provisions of the existing IBRD procurement guidelines and would need appropriate sanctions from statutory authorities.

4. In case of rehabilitation and resettlement schemes, ESMF guidelines of TNUIFSL are to be followed.

In case of capital expenditure, the Grant Fund is to be used only to support schemes, which directly benefit urban poor. The target population specified in your Loan/Grant application should not be changed. If there is any variation, especially a decrease in urban poor benefited, this grant amount will be converted into loan at interest rates currently prevailing on TNUDF loans.

**அ.கு.** கடலூர் மாநகராட்சிக்கான ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டும் பணி ரூ. 42.00 கோடி மதிப்பீட்டிற்கு நிதி பகிர்ந்தளிப்பு செய்யப்பட்டதில், மானியத் தொகை ரூ. 33.60 கோடி ஒப்புதல் பெறப்பட்டதற்கு 31.03.2023 வரை கால நீட்டிப்பு செய்ய மேற்கண்ட 5 நிபந்தனைகளை ஏற்று பணி மேற்கொள்ள மாமன்றம் அனுதிக்கலாம்

**34)** கடலூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டும் திட்டம் ரூ. 42.00 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்த, தமிழ்நாடு மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் (TNSUDP) மூலம் கீழ்கண்டவாறுள்ள நிதி பகிர்ந்தளிப்பு செய்யப்பட்டதில், ரூ. 4.20 கோடி கடன் தொகைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

| Sl. No | Means of Finance | Amount | % |
|---|---|---|---|
| 1 (i) | Loan from Tamil Nadu Urban Development fund (TNUDF) under world Bank assisted TNSUDP | 4.20 | 10.00 |
| (II) | Grant from Project Sustainability Grant fund (PSGF) under world Bank assisted TNSUDP | 33.60 | 80.00 |
மேற்படி பணிகளுக்கு 23.09.2022 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியலின்படி கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் குறிப்பிடப்பட்டிருந்தது.

| வ. எண் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | 22.50 | M/s. Rishi motors, Kumbakonam. | 4.91% மதிப்பீட்டைவிட அதிகம். |

| | | | |
|---|---|---|---|
| | | M/s. Sri power Electronics. | 5.85% மதிப்பீட்டைவிடஅதிகம். |
| 2 | 22.50 | M/s. Rishi motors, Kumbakonam. | 4.91% மதிப்பீட்டைவிடஅதிகம். |
| | | M/s. Sri power Electronics. | 5.85% மதிப்பீட்டைவிடஅதிகம். |

மேற்காணும் இரண்டு பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டினை விட கூடுதலாக விலைவிகிதம் அளித்துள்ளதால், அவற்றில் குறைவாக விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரரிடம் விலைகுறைப்பு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டதில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்திலேயே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளார்.

| வ. எண் | மதிப்பீடு. (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | 22.50 | M/s. Rishi motors, Kumbakonam. | 4.91% மதிப்பீட்டைவிடஅதிகம். |
| 2 | 22.50 | M/s. Rishi motors, Kumbakonam. | 4.91% மதிப்பீட்டைவிடஅதிகம். |

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ள இந்த பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புதல் செய்யவும் பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

இத்திட்ட பணியினை உடன் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி மதிப்பீட்டைவிட கூடுதல் விலைவிகிதத்திற்கு, 15வது மத்திய நிதியின் கீழ் மேற்கண்ட பணிகளுக்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**57)** கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 34, ஆலைக்காலனி கழிப்பிடம் பழுதடைந்துள்ளது. அந்த கழிப்பிடத்தை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்தில் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ளவும், இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம். (9783/ 2022/ இ1)

**58)** கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 45 சால்ட் ஆபிஸ் ரோடு பகுதியில் அமைந்துள்ள சிறுபாலம் முற்றிலும் பழுதடைந்து தண்ணீர் செல்வது தடைபட்டுள்ளது. தற்போது மழைக்காலம் தொடங்க உள்ளதால் மேற்படி சிறுபாலம் அமைப்பது அவசியமாகின்றது. எனவே மேற்படி சிறுபாலம் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 9.80 இலட்சத்தில் பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்

**59)** கடலூர் மாநகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய திரு.வீ.பாரதி, 31, சின்னப்பன் தெரு, வசந்தராயன்பாளையம், கடலூர் துறைமுகம் என்பவர் உரிய ஆவணங்களுடன், பதிவு கட்டண தொகை செலுத்தி விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஒப்பந்ததாரரின் பதிவு ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரரை இம்மாநகராட்சியில் வகுப்பு 5 ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**60)** கடலூர் மாநகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் தூய்மைப் பணிகள் ஆய்வு செய்ய வேண்டிய துப்புரவு ஆய்வார்கள் பணியிடம் 11–ல் தற்போது 3 பணியிடம் மட்டுமே உள்ளது. மீதம் காலியாக உள்ள பணியிடம் நிரப்பிட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிரந்தர துப்புரவு ஆய்வர்கள் நிரப்பிட உரிய உத்தரவு வரும் வரையில், பொது சுகாதார அத்தியாவசிய தூய்மைப் பணிகள் செய்தல் மற்றும் தமிழ்நாடு பொது சுகாதாரச்சட்டம் 1939, தமிழ்நாடு பிறப்பு–இறப்பு பதிவு விதிகள் 2000 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ஆகிய சட்ட விதிகளை அமல்படுத்துதல், உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசியப் பணிகளை துப்புரவு ஆய்வர்கள் மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி பணிகள் திறம்பட செய்து முடிக்க காந்திகிராமிய பல்கலைக்கழகத்தில் சுகாதார ஆய்வாளர் பயிற்சி பெற்ற 6 நபர்கள் துப்புரவு ஆய்வர்களை (ஒப்பந்தம் அடிப்படையில்) மூன்று மாதங்களுக்கு அமர்த்தி பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த விலை விகிதம் வரப்பட்டுள்ளதின் விபரம்.

(ஒரு நபருக்கு/ ஒருமாதத்திற்கு)

| வ. எண். | ஒப்பந்தப்பந்ததாரர்கள் விவரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. | (சதவிகிதத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | ரிசோர்ஸ் டெக், காந்தி நகர், வேலூர்–6 | 439446/– | 439308/– | 0.02 % குறைவு |
| 2 | ஜாஸ் பவுண்டேசன் (பி) லிட்., சென்னை–75 | | 501468/– | 14 % அதிகம் |

மேற்காணும் விலை விகிதம் மாமன்றத்தின் பார்வைக்கும், வரிசை எண்.1–இல் காணும் ரிசோர்ஸ் டெக், வேலூர் என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மதிப்பீட்டை விட 0.02% குறைவாக வழங்கப்பட்டுள்ளதை ஏற்று பணி உத்தரவு வழங்க மாமன்றத்தின் முன்அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.10523/2022/எச்1)

| | |
|---|---|
| **61)** | இம்மாநகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகளை கடலூர் முதுநகர் அருள்மிகு வரதராஜபெருள் திருக்கோவிலுக்கு சொந்தமான காலி இடத்தில் குப்பைகள் கொட்டப்படுவதை தொடர்ந்து நகராட்சி மீது, செயல் அலுவலர், அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோவில் திருப்பாதிரிபுலியூர், கடலூர்–2 என்பவரால் மேன்மைமிகு இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், கடலூரில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண்.ஓ.எஸ்.9/2016ன் தீர்ப்பின்படி அபராதத் தொகையாக ரூ.10,000/–ம், வழக்காடு மன்றம் செலவினம் ரூ.16,963/–ம் சேர்த்து மொத்தம் ரூ.26,963/–னை கடலூர், மாவட்ட நீதிமன்றத்தில் செலுத்த உத்தரவிடப்பட்டதாக அறிவிப்பு வழக்குரைஞர் திரு.எஸ்.சச்சிதானந்தம் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி அபராதத்தொகையினை தொடர்பாக மாநகராட்சி சார்பாக எதிர்வக்காலத்து தாக்கல் செய்ய வழக்குரைஞர் திரு.எஸ்.சச்சிதானந்தம் அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டு, வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்காக வழக்குரைஞர் திரு.எஸ்.சச்சிதானந்தம் அவர்கள் ரூ.8,200/–வழக்குக் கட்டணமாக வழங்க கோரிய கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும், வழக்குரைஞர் கட்டணத் தொகை வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மாமன்றம் அனுமதிக்கலாம். (8363/ 19/ எச்1) |
| **62)** | கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள் விநாயகர் சிலைகளை கடலில் கரைப்பதற்காக கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த கடற்கரை பகுதியில் தடுப்பு சுவர், கண்காணிப்பு கோபுரம், ஒலி பெருக்கி மற்றும் சாமினா பந்தல் அமைக்கும் பணி ரூ.1.55 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு **02.09..2022–ம்** தேதி விலைப்புள்ளி பெறப்பட்டதில், பெறப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது. |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. R, ரவிச்சந்திரன், கடலூர் | ரூ.1,54,403/–<br>(மதிப்பீட்டை விட குறைவு.) |
| 2. | திருமதி. R. நவநீதம், கண்ணகி நகர், வண்டிப்பாளையம் ரோடு, கடலூர் | ரூ.1,67,737/–<br>(மதிப்பீட்டை விட அதிகம்) |
| 3 | திரு .P. பற்குணன், கடலூர் | ரூ.1,58,415/–<br>(மதிப்பீட்டை விட அதிகம்.) |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண் **1**ல் கண்ட திரு. R, ரவிச்சந்திரன், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி (**ரூ.1,54,403/-** (மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள திரு. R, ரவிச்சந்திரன், கடலூர் என்பவரின் விலைப்புள்ளி ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மேயர், அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அ.கு.** | மாமன்றம் அனுமதிக்கலாம். **(ந.க. எண்.10753/2022 /இ1)** |

**63)**

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட கற்பக விநாயகர் கோயில் தெருவில் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் 16.09.2022 அன்று முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை மாண்புமிகு வேளான் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்க உள்ளதால் விழாவிற்காக பந்தல் அமைத்தல், மின் விளக்குகள், நாற்காலிகள், மைக் செட் அமைக்கும் பணி ரூ.1.46 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 14.09..2022–ம் தேதி விலைப்புள்ளி பெறப்பட்டதில், பெறப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. R, ரவிச்சந்திரன், கடலூர் | ரூ.1,45,730/–<br>(மதிப்பீட்டை விட குறைவு.) |
| 2. | திருமதி. R. நவநீதம், கண்ணகி நகர்,<br>வண்டிப்பாளையம் ரோடு, கடலூர் | ரூ.1,66,734/–<br>(மதிப்பீட்டை விட அதிகம்..) |
| 3 | திரு .P. பற்குணன், கடலூர் | ரூ.1,88,092/–<br>(மதிப்பீட்டை விட அதிகம்.) |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு. R, ரவிச்சந்திரன், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி (ரூ.1,45,730/- மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள திரு. R, ரவிச்சந்திரன், கடலூர் என்பவரின் விலைப்புள்ளி ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மேயர், அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க. எண்.10754/2022 /இ1)

**64)**

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட சுப்பராயலு பூங்கா, மத்திய பேருந்து நிலையம், மஞ்சக்குப்பம் மற்றும் கடலூர் முதுநகர் பகுதிகளில் அமைந்துள்ள மணிகூண்டுகளில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணி ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 07.10.2022–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில், பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. R, ரவிச்சந்திரன், கடலூர் | 0.06% (ரூ.3,35,933)<br>மதிப்பீட்டை விட குறைவு. |
| 2 | திரு .S. கிருஷ்ணமூர்த்தி,<br>பாகூர் | 0.73% (ரூ.3,38,590)<br>மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு. R, ரவிச்சந்திரன், கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.06% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. R, ரவிச்சந்திரன், கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புதல் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.11062/2022/இ1)

65) கடலூர் மாநகராட்சிக்கு 15வது மத்திய நிதி ஆணைய பரிந்துரைகளின்படி, 2021–22ம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட Tied Grant நிதியில் குடிநீர் மற்றும் Sanitation பிரிவுக்கென கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

| S,No | Name of the works | Estmate ( Rs, in lakhs ) |
|---|---|---|
| 1 | Supply and commissioning of organic plastic Shreddar with Extruction mixer, Extruder and Granulator | 30.00 |
| 2 | Supply and Commissioning of GPS arrangements for all Public health & Engineering Vehicles | 7.00 |
| 3 | Supply and delivery of Mini water tanker Lorry 1 No. | 20.00 |
| | **Total** | **57.00** |

மேற்படி பணிகளுக்கு 30.09.2022 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியலின்படி கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் குறிப்பிடப்பட்டிருந்தது.

| **வ. எண்** | **மதிப்பீடு** (ரூ இலட்சத்தில்) | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம்** |
|---|---|---|---|
| 1 | 30.00 | M/s. Resource Tech, Vellure. | 0.15% மதிப்பீட்டைவிட கு |
| | | M/s. Jass Foundation pvt ltd, Chennai . | 1.02% மதிப்பீட்டைவிடஅ |
| 2 | 7.00 | M/s. Evergreen Enterprises. | 0.10% மதிப்பீட்டைவிட கு |
| | | M/s. Resource Tech, Vellore. | 0.65% மதிப்பீட்டைவிடஅ |
| 3 | 20.00 | M/s. Krysttal motors pvt Ltd,. Salem | 0.48% மதிப்பீட்டைவிடஅ |
| | | M/s. K. J motors, Hosur. | 13.10% மதிப்பீட்டைவிடஅ |
| | | M/s. Perfect Auto Engineering works,. Salem | 0.60% மதிப்பீட்டைவிடஅ |

மேற்காணும் மூன்று பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக விலைவிகிதம் அளித்துள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புதல் செய்யவும் பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | மதிப்பீடு. (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | 30.00 | M/s. Resource Tech, Vellore. | 0.15% மதிப்பீட்டைவிட குறைவு. |
| 2 | 7.00 | M/s. Evergreen Enterprises. | 0.10% மதிப்பீட்டைவிட குறைவு. |
| 3 | 20.00 | M/s. Krysttal motors pvt Ltd,. Salem | 0.48% மதிப்பீட்டைவிடஅதிகம். |

| | |
|---|---|
| | |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 66) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட கடற்கரை சாலை சீத்தாராம் நகர் பிரதான சாலை சந்திப்பு சாலையின் மேற்புறம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் நவீன மீன் விற்பனை அங்காடி கடல் மீன்வளம் கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மறு கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ் (GRRR) மீன்பிடி (ம) அதனை சார்ந்த தொழிலினை மேம்படுத்திட மீன் துறை உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் ந.க.எண்.3281/ஈ/2019 நாள் 02.06.2022ன்படி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேற்படி இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்கள் அனுமதி பெற்று இடம் ஒதுக்கித்தரலாம் என நகரமைப்பு பிரிவால் குறிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>1. தேவனாம்பட்டினம் கடற்கரை சாலை சீத்தாராம் நகர் பிரதான சாலை சந்திப்பு சாலையின் மேற்புறம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் நவீன மீன் விற்பனை அங்காடி வரைப்படம் (300 சதுர அடி பரப்பளவு)<br>2. சார்பதிவாளர் அலுவலகத்தில் பெறப்பட்ட நில மதிப்பீட்டு சான்று.<br>3. இடத்திற்கான வாடகை கணக்கீட்டு படிவத்தின்படி மாதம் 1க்கு ரூ.2300/— என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்கண்டுள்ள இடத்தில் நவீன மீன் அங்காடி அமைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 67) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம், செயின்ட் ஜோசப் கல்லூரி சாலையின் கீழ்புறம் மீன் விற்பனை அங்காடி விற்பனை நிலையத்திற்கு இடம் ஒதுக்கித்தர கேட்டு மீன் துறை உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் ந.க.எண்.3281/ஈ/2019 நாள் 05.01.2021ன்படி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேற்படி இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல், நகராட்சி நிர்வாக இயக்கநர், அவர்களின் அனுமதி பெற்று இடம் ஒதுக்கித்தரலாம் என நகரமைப்பு பிரிவால் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.<br>1. மஞ்சக்குப்பம், செயின்ட் ஜோசப் கல்லூரி சாலையின் கீழ்புறம் நவீன மீன் விற்பனை அங்காடி வரைபடம் (300 சதுர அடி பரப்பளவு)<br>2. சார்பதிவாளர் அலுவலகத்தில் பெறப்பட்ட நில மதிப்பீட்டு சான்று.<br>3. இடத்திற்கான வாடகை கணக்கீட்டு படிவத்தின்படி மாதம் 1க்கு ரூ.2300/— என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்கண்டுள்ள இடத்தில் நவீன மீன் அங்காடி அமைத்திட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம், |
| 68) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட முதுநகர் நகராட்சி மருத்துவமனை அருகில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் ஆவின் பாலகம் அமைத்திட பொதுமேலாளர் TND 1898 கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட் அவர்களின் கடிதம் ந.க.எண்.5/வி.ப./2019 நாள் 26.07.2021ன்படி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேற்படி இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் இடம் ஒதுக்கித்தரலாம் என நகரமைப்பு ஆய்வரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சிக்குட்பட்ட முதுநகர் |

| | |
|---|---|
| | மாநகராட்சி மருத்துவமனை அருகில் ஆவின் பாலகம் அமைத்திட அனுமதி கோரி இவ்வலுவலக கடிதம் 7022/2021/எப்–2 நாள் 17.09.2021ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.24566/2021/ஆர்2 நாள் 20.10.2021ன் கடிதத்தில் கீழ்க்கண்டுள்ள கூடுதல் விபரங்களுடன் மன்ற அனுமதி பெற்று நகர்மன்ற தீர்மான நகலுடன் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>1. ஆவின் பாலகம் அமைத்திட உத்தேசிக்கப்பட்ட இடத்தின் வரைப்படம் (மாநகராட்சிக்குட்பட்ட முதுநகர் மாநகராட்சி மருத்துவமனை அருகில் (10X10)<br>2. சார்பதிவாளர் அலுவலகத்தில் பெறப்பட்ட நில மதிப்பீட்டு சான்று.<br>3. இடத்திற்கான வாடகை கணக்கீட்டு படிவத்தின்படி மாதம் 1க்கு ரூ.1500/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்கண்டுள்ள இடத்தில் ஆவின் பாலகம் அமைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 69) | கடலூர் மாநகராட்சிப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு பணிக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக நகரில் பல்வேறு இடங்களில் காய்ச்சல் தடுப்பு முகாம் நடத்தப்பட்டும் வருகிறது. மேலும் ஈடிஸ் கொசுக்கள் முட்டையிட ஏதுவான காரணிகளை கண்டறியவும், அவைகளை அழிப்பதற்கும் மகளிர் சுயஉதவிக்குழுவிலிருந்து, டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>கடலூர் மாமன்றத் தீர்மானம் எண்.426, நாள். 20.05.2022 தீர்மானத்தின்படி, இவ்வலுவலக ந.க.எண். 4029/2022/எச் 2, நாள். 21.06.2022 ன்படி, அன்னபூரணி மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வேலை உத்தரவு ( ஜுன் 2022 முதல் ஆகஸ்ட் 2022 முடிய ) வழங்கப்பட்டதன் அடிப்படையில், 3 மாதக்காலத்திற்கு 90 டிபிசி பணியாளர்கள் அனுப்பப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது. தற்போது ஒப்பந்தக்காலம் ஆகஸ்ட் 2022 உடன் முடிவடைகிறது. மற்றும், தற்போது மழைக்காலமாக இருப்பதால், இந்த கொசு ஒழிப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது என சுகதார ஆய்வர் குறிப்பு கொடுத்துள்ளதையடுத்து, கொசு ஒழிப்பு பரப்புரையாளர்கள் பணியினை மேலும் 3 மாதங்களுக்கு ( செப்டம்பர் 2022 முதல் நவம்பர் 2022 முடிய ) நீட்டிப்பு செய்யவும், அதே மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு அதே விலை விகிதத்தில் வேலை நீடிப்பு செய்து உத்தரவு வழங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 18,00,000/– லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | 1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. பொது சுகாதார நலன்கருதி, மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதிப்பெற்று, நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 4029/2022/H 2) |
| 70) | கடலூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் திடக்கழிவுகளை கையாளுதல் பணிக்கும், கழிவு நீர் கால்வாய் மற்றும் மழை நீர் கால்வாய் அடைப்புகளை நீக்கம் செய்யவும், மற்றும் வசந்தராயன் பகுதியில் அமைந்துள்ள பசுமை உரக்குடிலில், ,கரில் சேகரிக்கப்படும் |

| | |
|---|---|
| | குப்பைகளை தரம் பிரித்து முடிவுக்கு கொண்டு வரும் பணிக்கும், மழை நேரங்களில் நகரில் எங்கும் மழைநீர் தேங்காத வண்ணம் உடனடியாக வடியச் செய்யவும், மண்வாறு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.<br>1. நகராட்சியில் பொது சுகாதாரப்பணிக்கு பயன்படுத்தப்படும் மண்வாறு இயந்திரங்கள் இயக்குவதற்கு போதிய கனரக ஓட்டுநர் உரிமம் பெற்ற ஓட்டுநர்கள் இன்மையால், ஏற்கனவே உள்ள மண்வாறு இயந்திரம் TN. 31 AA 4948 பதிவெண் கொண்ட வாகனம் இயக்குவதற்கு, நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. சேஷாத்ரி மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர் பெறப்பட்டு, வாகனம் இயக்கப்பட்டு வருகிறது.<br>2. மேலும், TN. 31 CE 8101, TN. 31 CE 8212, மண்வாறு இயந்திரம் மற்றும் TN. 31 CE 8193 பாப்காட் வாகனமும் இயக்குவதற்கு ஓட்டுநர் இன்மையால், மூன்று கனரக வாகன ஓட்டுநர் உரிமம் கொண்ட ஓட்டுநர்கள் நியமிக்க வேண்டியுள்ளது.<br><br>மேற்படி வரிசை எண் 1 ல் கொண்ட வாகன ஒட்டுநர் ஒப்பந்த காலம், அக்டோபர் 2022 உடன் முடிவடைவதால், மேலும் ஒரு மாதக் காலத்திற்கு நவம்பர் 2022 ஒரு மாத காலத்திற்கும், மற்றும் வரிசை எண் 2 ல் கொண்ட வாகனங்கள் இயக்குவதற்கு மூன்று ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் செப்டம்பர் 2022 முதல் நவம்பர் 2022 வரை வைத்து பணி செய்யவும், மேலும், பணியினை ஏற்கனவே, மண்வாறு இயந்திரம் ஓட்டுநர் அனுப்பி வைக்கும் திரு. T. சேஷாத்ரி ஒப்பந்ததாரருக்கு, அதே விலைவிகிதத்தில் அனுப்பி வைத்து பணி செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 2.50 லட்சத்திற்கும், மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |
| அ.கு. | 1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி வாகனங்களின் பயன்பாடு மற்றும் பொது சுகாதார நலன்கருதி, மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதிப்பெற்று, நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>(ந.க.எண். 8892/2020/H 2) |
| 71) | கடலூர் மாநகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி. த. வசந்தா என்பவர் 15.07.2021ல் இறந்து விட்டமையால், தற்போது அவர் பெயரில் நடைபெற்று வரும் பணிகளுக்கான தொகைகளை அவரது மகன் திரு. த. குமார் என்பவர் தனது பெயரில் வழங்குமாறு மனு செய்துள்ளார். மேலும் அதற்கான இறப்புச்சான்று, வாரிசு சான்று, மற்ற வாரிசுகளிடமிருந்து பெறப்பட்ட நோட்டரி தடையின்மை சான்றிதழ் மற்றும் GST சான்றிதழ் இணைத்துள்ளார். இதனடிப்படையில் திருமதி. த. வசந்தா, ஒப்பந்ததாரர் பெயரில் நடைபெற்று வரும் பணிகளுக்கான தொகையை அன்னாரது மகன் திரு. த. குமார் வசம் வழங்கவும், மேற்படி திரு. த. குமார் என்பவரை இம்மாநகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 72) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட கடலூர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் செல்லும் சாலைக்கும் காங்கிரஸ் காரிய கமிட்டி மதில் சுவர் ஒட்டியுள்ள பகுதிகளுக்கு இடையில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் ஆவின் பாலகம் அமைத்திட பொதுமேலாளர் TND 1898 கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட் அவர்களின் கடிதம் ந.க.எண்.5/வி.ப./2022 நாள் 29.04.2022ன்படி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேற்படி இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் |

| | |
|---|---|
| | நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்கள் அனுமதி பெற்று இடம் ஒதுக்கித்தரலாம் என நகரமைப்பு ஆய்வர் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.<br>1. ஆவின் பாலகம் அமைத்திட உத்தேசிக்கப்பட்ட இடத்தின் வரைப்படம் (மாநகராட்சிக்குட்பட்ட கடலூர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம் செல்லும் சாலைக்கும் காங்கிரஸ் காரிய கமிட்டி மதில் சுவர் ஒட்டியுள்ள பகுதிகளுக்கு இடையில் (15X15)<br>2. சார்பதிவாளர் அலுவலகத்தில் பெறப்பட்ட நில மதிப்பீட்டு சான்று.<br>3. இடத்திற்கான வாடகை கணக்கீட்டு படிவத்தின்படி மாதம் 1க்கு ரூ.1800/— என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்கண்டுள்ள இடத்தில் ஆவின் பாலகம் அமைத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் ( 5635/2022/அ2 ) |
| 73) | கடலூர் மாநகராட்சி வார்டு எண். 1 முதல் 45 வரை திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையம், சாவடி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கேப்பர் மலை நீரேற்று நிலையங்களில் உள்ள 20க்கும் மேற்பட்ட ஆழ்துளை கிணறு நீர்மூழ்கி மோட்டார்கள் மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் உள்ள நீர்மூழ்கி மோட்டார்கள், வீட்டுவசதி வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் நீர்மூழ்கி மோட்டார்கள் மற்றும் நகரமெங்கும் அமைக்கப்பட்டுள்ள சிறுமின் விசை பம்புகளுக்கான ஆழ்துளை நீர்மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை நீக்கும் பணிக்கு ரூ.9.80 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளவும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசரம் கருதி மேயர், கடலூர் மாநகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம். |
| 74) | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானிய கோரிக்கையின் போது 24.08.2021 அன்று சட்டமன்றத்தில் தாம்பரம், பல்லாவரம், செம்பாக்கம், பம்மல் அனாகாபுத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றம் அதனைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு மாநகராட்சியாக அமைக்கப்படும். மேலும் காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர் மற்றும் சிவகாசி ஆகிய நகராட்சிகள் மற்றும் அதனை சுற்றி வளர்ச்சியடைந்துள்ள பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து ''மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும்'' என அறிவிக்கப்பட்டது.<br>கடலூர் மாநகராட்சியாக உருவாக்கப்படும் போது கடலூர் நகராட்சி மற்றும் அருகில் உள்ள பெரியகங்கணாங்குப்பம், உச்சிமேடு, நாணமேடு, குண்டுஉப்பலவாடி, பச்சையாங்குப்பம், குடிகாடு, கடலூர் ஓ.டி,*(OT) (NMPL),* கரையேறவிட்டகுப்பம், அரிசிபெரியாங்குப்பம், திருவந்திபுரம், பாதிரிக்குப்பம், தோட்டப்பட்டு, கோண்டூர், நத்தப்பட்டு, மருதாடு, வெள்ளப்பாக்கம், சேடப்பாளையம், காரைக்காடு மற்றும் செம்மங்குப்பம் ஆகிய 19 கிராம ஊராட்சிகளையும் ஒருங்கிணைத்து கடலூர் மாநகராட்சியாக தரம் உயர்த்தலாம் என கடலூர் மாநகராட்சி மன்றத் தீர்மான எண்.152 நாள்.23.09.2021ல் நிறைவேற்றப்பட்டது.<br>மேலும் பெரியகங்கணாங்குப்பம் கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.09.09.2021, உச்சிமேடு கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.08.09.2021, நாணமேடு கிராம ஊராட்சி தீர்மான எண்.5 நாள்.08.09.2021, குண்டுஉப்பலவாடி கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.08.09.2021, பச்சையாங்குப்பம் கிராம ஊராட்சி தீர்மான எண்.55 நாள்.08.09.2021, |

குடிகாடு கிராம ஊராட்சி தீர்மான எண்.155 நாள்.09.09.2021, கடலூர் ஒ.டி,*(OT) (NMPL),* கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.08.09.2021, கரையேறவிட்டகுப்பம் கிராம ஊராட்சி தீர்மான எண்.106 நாள்.08.09.2021, அரிசிபெரியாங்குப்பம் கிராம ஊராட்சி தீர்மான எண்.30 நாள்.09.09.2021, திருவந்திபுரம் கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.08.09.2021, பாதிரிக்குப்பம் கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.09.09.2021, தோட்டப்பட்டு கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.09.09.2021, கோண்டூர் கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.09.09.2021, நத்தப்பட்டு கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.08.09.2021, மருதாடு கிராம ஊராட்சி தீர்மான எண்.100 நாள்.23.09.2021, வெள்ளப்பாக்கம் கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.08.09.2021, சேடப்பாளையம் கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.09.09.2021, காரைக்காடு கிராம ஊராட்சி தீர்மான எண்.1 நாள்.09.09.2021 மற்றும் செம்மங்குப்பம் கிராம ஊராட்சி தீர்மான எண்.58 நாள்.09.09.2021 ஆகிய 19 கிராம ஊராட்சிகளில் மாநகராட்சியாக உருவாக்குவதற்கு இசைவு தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானங்களுடன் கடலூர் நகராட்சிக்கு அருகில் உள்ள 19 கிராம ஊராட்சிகளை கடலூர் மாநகராட்சியுடன் இணைத்து கடலூர் மாநகராட்சியாக தரம் உயர்த்த மாவட்ட ஆட்சியர் அவர்களிடமிருந்து கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டது.

கடலூர் பெருநகராட்சி தமிழ்நாடு அவசர சட்டம் 1/2021 மூலம் நாள் 20.10.2021ம் தேதியிலிருந்து ஏற்கனவே உள்ள 45 வார்டுகளை உள்ளடக்கிய அதே எல்லையுடன் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

கடலூர் நகரம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1866ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு 150வது ஆண்டு நிறைவு பெற்றுள்ள பழமை வாய்ந்த சிறப்பு நிலை பெருநகராட்சியாகவும், மாவட்ட தலைநகரமாகவும் அமைந்துள்ளது. மேலும் புதுச்சேரி மாநிலத்தின் தென்புற எல்லையை ஒட்டி அமைந்துள்ள மிகப்பெரிய நகராட்சியாகும். தற்போது இந்நகராட்சியின் பரப்பளவு 27.69 சதுர கிலோ மீட்டராகும். இதன் மக்கள் தொகை 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,73,636 ஆகும். ஆண்டு வருவாய் ரூ.49.968 கோடி. கடலூர் நகரம் 45 வார்டுகளாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. கடலூர் பெருநகராட்சி எல்லைக்குள் சுற்றுலா தலமான பாடலீஸ்வரர் திருக்கோயிலும், சில்வர் பீச் மற்றும் ஒரு மீன்பிடி துறைமுகமும் அமைந்துள்ளது.

கடலூர் பெருநகராட்சி வாழ்மக்களுக்கும் அன்றாடம் வந்து செல்லும் மக்களுக்கும் தரமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பாதாள சாக்கடை திட்டம் 36 வார்டுகளில் முழுமையாக முடிக்கப்பட்டு கழிவு நீர் வடிகால் வசதிகள் அனைத்து தெருக்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நகரின் சாலைகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காரைக்காடு, செம்மங்குப்பம், சேடப்பாளையம் ஆகிய கிராம ஊராட்சிகளில் விவசாயம் அதிகம் செய்து வருவதாகவும், மாநகராட்சியாக்கும்போது விவசாயம் முழுவதும் அழிந்துவிட வாய்ப்புள்ளதால் மேற்படி ஊராட்சிகளை கடலூர் மாநகராட்சியுடன் இணைக்க வேண்டாம் என அப்பகுதி மக்களால் கோரிக்கை வைக்கப்பட்டதன் அடிப்படையில் கள ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட கிராம ஊராட்சிகளில் விவசாயம் அதிகமாக செய்யப்பட்டு வருகிறது. எனவே ஏற்கனவே அரசுக்கு அனுப்பப்பட்ட 19 கிராம ஊராட்சிகளில் இருந்து காரைக்காடு, சேடப்பாளையம், செம்மங்குப்பம் ஆகிய 3 கிராம ஊராட்சிகளை நீக்கம் செய்து மீதமுள்ள 16 கிராம

| | |
|---|---|
| | ஊராட்சிகளை மட்டும் கடலூர் மாநகராட்சியுடன் இணைக்க அரசுக்கு உரிய அரசுக்கு உரிய வழிமுறைகளின் மூலம் அனுப்பிவைக்க மாமன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.<br><br>கடலூர் நகராட்சியை ஒட்டியுள்ள மேற்குறிப்பிடப்பட்ட 16 கிராம ஊராட்சிகளை கடலூர் நகராட்சியுடன் இணைத்து கடலூர் மாநகராட்சியாக தரம் உயர்த்துவதால் மத்திய மற்றும் மாநில அரசுகள் அறிவிக்கும் திட்டங்களின் கீழ் சாலைகள், பாதாள சாக்கடை, குடிநீர் திட்டம், மழைநீரினை முறையாக வெளியேற்றுவதற்கான ஒருங்கிணைந்த மழை நீர் கால்வாய் திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த வாய்ப்புள்ளதால் இப்பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் பொருளாதார தரம் உயரும்.<br><br>எனவே இந்நிலையில் பெரியகங்கணாங்குப்பம், உச்சிமேடு, நாணமேடு, குண்டுஉப்பலவாடி, பச்சையாங்குப்பம், குடிகாடு, கடலூர் ஓ.டி*,(OT) (NMPL),* கரையேறவிட்டகுப்பம், அரிசிபெரியாங்குப்பம், திருவந்திபுரம், பாதிரிக்குப்பம், தோட்டப்பட்டு, கோண்டூர், நத்தப்பட்டு, மருதாடு மற்றும் வெள்ளப்பாக்கம் ஆகிய 16 கிராம ஊராட்சிகளையும் கடலூர் மாநகராட்சியுடன் ஒன்றிணைத்து எல்லையை விரிவாக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். |
| அ.கு. | கடலூர் நகராட்சி 27.69 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதும் தற்போது 198987 மக்கள் தொகை கொண்ட பெருநகராட்சியாகும். இந்நகரத்தினை சுற்றி அமைந்துள்ள மேற்கண்ட பெரியகங்கணாங்குப்பம், உச்சிமேடு, நாணமேடு, குண்டுஉப்பலவாடி, பச்சையாங்குப்பம், குடிகாடு, கடலூர் ஓ.டி(NMPL), கரையேறவிட்டகுப்பம், அரிசிபெரியாங்குப்பம், திருவந்திபுரம், பாதிரிக்குப்பம், தோட்டப்பட்டு, கோண்டூர், நத்தப்பட்டு, மருதாடு, வெள்ளப்பாக்கம், ஆகிய 16 கிராம ஊராட்சிகளையும் கடலூர் பெருநகராட்சியுடன் இணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்திட அரசுக்கு உரிய வழி முறைகள் மூலமாக பிரேரணைகள் வழங்கலாம். |
| 75) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலைய குடிநீர் மஞ்சள் நிறமாக உள்ளதை சரி செய்யும் விதமாக இரும்பு தாது வடிகட்டும் அமைப்பில் நீரை வடிகட்டி அதன் பின்னர் உபயோகித்திட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்திற்கு புதியதாக மூன்று ஆழ்துளை கிணற்றிற்கு சுத்திகரிப்பு பணி செய்ய மணல் கொள்முதல் செய்து நிரப்பும் பணி மற்றும் தரம் வாரியாக சலித்து நீர் வடிகட்டும் தொட்டியில் நிரப்பும் பணிக்கு ரூ.12.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் |
| 76) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலைய குடிநீர் மஞ்சள் நிறமாக உள்ளதை சரி செய்யும் விதமாக இரும்பு தாது வடிகட்டும் அமைப்பில் நீரை வடிகட்டி அதன் பின்னர் உபயோகித்திட திருவந்திபுரம் தலைமை நீரேற்று நிலையத்திற்கு புதியதாக மூன்று ஆழ்துளை கிணற்றிற்கு மின்மோட்டார் மற்றும் மின் உதிரிப் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கும், மேலும் சுத்திகரிக்கப்பட்ட நீரை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீரேற்றம் செய்ய தேவைப்படும் வால்வுகள் பொருத்தும் பணி 15-வது நிதிக்குழு மானிய |

திட்டத்தின் கீழ் ரூ.45.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்

**77)** கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட செயிண்ட் ஜோசப் பள்ளி முதல் கிளைச் சிறைசாலை வரை புதிய குடிநீர் குழாய் அமைக்கும் பணி ரூ.4.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பிரிவு 15-ன் கீழ் 07.04.2022–ம் தேதி விலைப்புள்ளி பெறப்பட்டதில், பெறப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.09% (ரூ. 4,15,318)<br>மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர் | 2.77% (ரூ. 4,14,963)<br>மதிப்பீட்டை விட அதிகம். |
| 3 | திரு. R, ரவிச்சந்திரன், கடலூர் | 1.14% (ரூ. 4,26,807)<br>மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.T. சேஷாத்திரி ,கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி (0.09% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.T. சேஷாத்திரி ,கடலூர் என்பவரின் விலைப்புள்ளி ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மேயர், அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். /2022/இ2)

**78)** கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 28, கமலம் நகர் பகுதியில் சிமெண்ட் சாலை சேதமடைந்துள்ளது. சிமெண்ட் சாலை சீரமைக்கவும், மழைநீர் வடிகால் புதிதாக அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.14.20 இலட்சத்தில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**79)** நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.23124/ஆர்–1/ 2022–1/ நாள் 23.09.22ல் இரவின் நிழல் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க திரு.ராதாகிருஷ்ணன் பார்த்திபன், திரைக்கலைஞன் மறு நாள் 02.08.22ன்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இந்தக் கோரிக்கையின் மீது 2017–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்புகளின் கேளிக்கை வரிச் சட்டத்தின் (Tamil Nadu Entertainment Tax Act 2017) பிரிவு 11 (1)–ன்படி மாமன்றம் தீர்மான முடிவினை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இரவின் நிழல் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 11197/2022/அ2

**80)** இம்மாநகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலைய கடைகள்.10, 11 மற்றும் 23–ஐ அரசாணைப்படி கடையினை பெயர்மாற்றம் செய்யக் கேட்டு விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பேருந்து நிலைய கடை எண். | கடை நடத்தி வருபவர் பெயர் மற்றும் முகவரி | கடை பெயர் மாற்றம் செய்யப்படுபவர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|
| 1 | 11 | பால்சந்த், சங்கரன் நாயிடு தெரு, திருப்பாதிரிப்புலியூர். | E. இன்பமொழி, ராஜம் நகர், திருப்பாதிரிப்புலியூர். |
| 2 | 10 | P.கிருஷ்ணசாமி, 58,59,சஞ்சீவிராயன் தெரு, திருப்பாதிரிப்புலியூர் | K.வைத்தியநாதன், 106, வள்ளலார் நகர், ஆனந்த விநாயகர் கோவில் எதிரில், கடலூர். |
| 3 | 23 | S.வெங்கிடாஜலம், ராஜம் நகர், திருப்பாதிரிப்புலியூர். | E.இன்பமொழி, ராஜம் நகர், திருப்பாதிரிப்புலியூர். |

மேற்கண்டுள்ள பெயர் மாற்றம் விண்ணப்பங்களை ஆய்வு செய்து வருவாய் ஆய்வர், கடலூர் மாநகராட்சி, அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்–03.07.2007ன்படி அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றித்தரலாம் என்றும் முதல் குத்தகைகாரரின் வாரிசுதாரரின் பெயர் குத்தகை உரிமம் மாற்றம் பெற உரிமையுடையவராவார். சட்டப்படியான வரிதாரர்கள் பொதுவான குத்தகை நிர்ணயத்திற்கு உட்பட்டவர்களாவர். இதனடிப்படையில் வரிசை எண்.2ல் உள்ள விண்ணப்பத்தின்படி வாரிசு அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யவும், வ.எண்கள்.1 மற்றும் 3ல் உள்ள விண்ணப்பத்தின்படி அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிம பெயர் மாற்றம் செய்யலாம் என அறிக்கை அளித்துள்ளார். எனவே, அரசாணை மற்றும் வருவாய் ஆய்வர் அறிக்கை இவற்றின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 1476/2022/அ2

**81** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண் 228 நாள் 13.11.2008. ல் எரிவாயு தகனமேடை பராமரிக்கும் பணியினை தொண்டு நிறுவனம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மாநகராட்சிக்கு சொந்தமான 1. கம்மியம்பேட்டை எரிவாயு தகனமேடை ( சர்வே எண் 1874.2) 2.மஞ்சக்குப்பம் எரிவாயு தகனமேடை ( சர்வே எண் 5,2,33/2) ஆகியவற்றினை சொந்த செலவில் ஓராண்டிற்கு இயக்கி பராமரிக்க தொண்டு நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகள் பெறுவதற்கு தன் விருப்பம் கோரும் அறிவிப்பு கோரப்பட்டதில் 18.08.2022ல், Moksha Dwara, 5/137. B.V.S. Nagar, Thangam Avenue Annex, Sikkarayapuram, Chennai-600 128 என்கிற டிரஸ்ட் எரிவாயு தகனமேடைகளில் ஒரு சரீரம் தகனம் செய்ய ரூ.3000/– பொதுமக்களிடம் வசூலித்து அதில் ரூ.100/– மாநகராட்சிக்கு செலுத்தி மீதமுள்ள தொகை

| | |
|---|---|
| | ரூ.2900/—ல் எரிவாயு முதல் பராமரிப்புகள் வரை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளனர். மேற்படி டிரஸ்டின் விருப்பக் கடிதத்தினை ஒப்புதல் செய்து கம்மியம்பேட்டை மற்றும் மஞ்சக்குப்பம் எரிவாயு தகனமேடையினை பராமரித்துக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மாமன்றம் அனுமதிக்கலாம். |

மாநகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 19.10.2022

மேயர்,
கடலூர் மாநகராட்சி.